செ.வெ.எண்: 538 1.7.10.

பத்திரிக்கைச் செய்தி

இன்று 1.7.2010 காலை 9.00 மணிக்கு மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி ஆ.தமிழரசி அவர்களால் ஏழை, எளிய ஆதிதிராவிடர் மக்களுக்காக தமிழக அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து கட்டணம் ஏதும் இன்றி, அறிந்து கொள்ள வசதியாக, கட்டணமில்லா தொலைபேசி எண் **1800 425 55 44** ( Toll Free Number) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த எண்ணை பொது மக்கள் கட்டணமின்றி அலுவலக நேரத்தில் தொடர்பு கொண்டு தாட்கோ திட்டங்கள் தொடர்பான முழுவிவரங்களை பெறலாம்.

மேலும் இன்று ஆதிதிராவிடர் நலத்துறையில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள 23 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு பணி நியமன ஆணையினை வழங்கினார். மேலும், இவ்வரசால் ஏற்கனவே 56 முதுநிலை பட்டதாரி ஆசிரியர்களும், 453 பட்டதாரி ஆசிரியர்களும், 668 இடைநிலை ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இது தவிர 505 ஆசிரியரல்லாப் பணியிடங்களும் இவ்வரசால் நிரப்பப்பட்டுள்ளது.

மேலும், ஆதிதிராவிடர் நலத்துறையின் மானியக் கோரிக்கையில் போது அறிவித்தவாறு 1986 ஆம் ஆண்டில் ஒப்பந்த முறையில் பணியமர்த்தப்பட்ட ஆசிரியர்களில் 174 ஆசிரியர்களின் பணிகள் அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதலிலே பணிவரன்முறை செய்து கடந்த 07.6.2010 அன்று அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வாறு ஆசிரியர்கள் நலனில் அக்கறை கொண்டுள்ள கலைஞர் அரசின் நடவடிக்கைகளால் 2006 ஆம் ஆண்டில் 70 சதவீதமாக இருந்த 10 ஆம் வகுப்பு தேர்ச்சி விகிதம் இவ்வாண்டு 81 சதவீதமாகவும், 2006 ஆம் ஆண்டு 54 சதவீதமாக இருந்த 12 ஆம் வகுப்பு தேர்ச்சி விகிதம் இவ்வாண்டு 76 சதவீதமாகவும் உயர்ந்துள்ளது.

மேலும் இந்நிகழ்ச்சியில் ஆதிதிராவிடர் நலத்துறையின் அரசு முதன்மைச் செயலாளர் திரு விஷ்வநாத் ஷெகாவ்கர்,இ.ஆ.ப., ஆதிதிராவிடர் நலத்துறையின் ஆணையர் திரு பொ.சிவசங்கரன்,இ.ஆ.ப., தாட்கோ மேலாண்மை இயக்குநர் திரு சந்திரகாந்த் பி.காம்ப்ளே,இ.ஆ.ப., மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறையின் உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சரின்
கூடுதல் சிறப்பு நேர்முக உதவியாளர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9